**லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் - 2019**

-----------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்ப்புக்கள் வேறுபட்டால் மாற்றங்கள் எல்கேஏஎஸ் 08 | எல்கேஏஎஸ் 08 இன் பிரகாரம் எல்சீசீ இற்குச் சொந்தமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட 3 வாகனங்களிற்காக மதிப்பிடப்பட்ட மதிப்பீட்டை நாங்கள் பெற்றுக்கொள்வோம். தேவையான சீராக்கங்கள் 2020 கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் தற்போதும் பாவனையிலுள்ள முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| (ஆ) | வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆம் பந்தியின் பிரகாரம் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவைக் கட்டணத்திற்குரிய (ஈஎஸ்சீ) ரூபா 159,549,619 மதிப்பீடு தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவை தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 75,461,644 தொகையாகும். மேலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த ஈஎஸ்சீ ரூபா 579,179,232 தொகையாகும். முறையாக திருத்தப்பட்ட 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் ஈஎஸ்சீ பொறுப்பு காலாண்டு முடிவடைந்த பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தின் இருபதாம் நாள் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் கம்பனியானது இவ் அறிக்கைத் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை. | சீஈபீ உடன் தீர்ப்பனவை மேற்கொள்வதற்கான கலந்துரையாடலில் நாங்கள் தற்போது உள்ளதால் ஈஎஸ்சீ தீர்ப்பனவு காலத்தை நீடிப்பதற்கு கோரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடிதமொன்றை நாங்கள் எழுதியுள்ளோம். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருமானம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 18) 14 ஆம் பந்தியின் பிரகாரம் பொருள் விற்பனையிலிருந்தான வருமானம் | இவ் விலையிடல் பொறிமுறை உள்நாட்டு வருமானவரி திணைக்களத்தின் அதிகாரியொருவரின் (பிரதி ஆணையாளர்) | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இனங்காணப்பட்டிருக்கவில்லை. நிலக்கரி இறக்குமதியின் போது சுங்க நோக்கத்திற்காக பெறுமதி மதிப்பீட்டின் போது கற்பனையான சீராக்கமாக சுங்கங்களிற்கான பெறுமதிக்கு 10 சதவீத இலாப எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் வருமானத்திற்கு ரூபா 3,804,035,310 தொகையான 10 சதவீத கற்பனையான இலாப எல்லையை கம்பனி சேர்த்திருந்ததுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோர்களிற்கு கழிவாக அத்தகைய தொகையை வழங்கி விற்பனைக் கிரயத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக விற்பனைக் கிரயம் மற்றும் வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பாக மேலதிக ஈஎஸ்சீ செலுத்தப்பட வேண்டியிருந்தது. | பிரசன்னத்துடன் 2018 யூன் 28 இல் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தை தொடர்ந்து பின்பற்றப்பட்டது. சீஈபீ இற்கான விலைச்சிட்டைகள் மீதான வற்றிற்காக (VAT) எல்சீசீ இன் அடிப்படை பெறுமதி சுங்க நோக்கங்களிற்கான பெறுமதியை விடக் குறைவாக இருக்கக்கூடாதென இவ் அதிகாரிகள் கூறியிருந்தனர். 10% என்பது பணிப்புரையின் பேரில் மாத்திரமே சேர்க்கப்பட்டதால் 2018/09/07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு எழுதப்பட்டுள்ளது. நாங்கள் சீஈபீ இன் கடிதத்திற்கான ஐஆர் இன் பதிலிற்காக காத்திருக்கின்றோம். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 செப்தெம்பர் 19 தொடக்கம் 2018 ஏப்ரல் 09 வரை இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல்வாங்கல் பெறுமதியை வெளிப்படுத்தாதமை தொடர்பாக இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகையான பறிமுதலொன்று (தண்டப்பணம்) கம்பனிக்கு விதிக்கப்பட்டுள்ளது. கம்பனி இத் தண்டப்பணக் கொடுப்பனவை இலங்கை சுங்க வற் கணக்கில் ரூபா 155,426,118 ஆகவும் வற் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 39,970,418 ஆகவும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கில் ரூபா 9,603,464 ஆகவும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. இதன் விளைவாக செலவினங்கள் ரூபா 205,000,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் சொத்துக்கள் ரூபா 195,396,536 ஆல் அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 9,603,464 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. மேலும், கம்பனி ரூபா 126,956,898 தொகையை சீஈபீ | அச்சமயத்தில் சுங்க வெளிப்படுத்தல் பகுதி இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தால் ஏற்றுமதி ஒன்று ரூபா 1,000,000 கட்டணமொன்றிற்கு முழுமையாக கையாளப்பட்டது. மேற்படி தொடர்புடைய ஏற்றுமதிகளின் சரியான கொடுக்கல்வாங்கல் பெறுமதிகளை பயன்படுத்தி எல்சீசீ மற்றும் இலங்கை மின்சார சபை இரண்டாலும் மேற்கொள்ளப்பட்ட வேலையை அடிப்படையாகக் கொண்டு எல்சீசீ சுங்க வற் கொடுப்பனவாக கணக்கீடு செய்திருந்தது.<br><br>இலங்கை சுங்கம் நிலக்கரி ஏற்றுமதிக்கான அனுமதியை கொண்டிருப்பதால் சீஈபீ ஆல் வழங்கப்பட்ட நிதிகளை | இக் கொடுப்பனவை தண்டப்பண செலவினங்களாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பணிப்பாளர் சபையிடமிருந்து இக் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடமிருந்து பெற வேண்டியதாகவும் பதிவேட்டில் வற் தொடர்பாக செலுத்த வேண்டிய சுங்க வற் ஆகவும் பதிவு செய்திருந்தது. எனினும் இப் பெறுமதியை சரிபார்ப்பதற்கு ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் வழங்கப்படவில்லை.<br><br>ஏற்றுமதி விலைப்பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறப்பட்ட நிதியை சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மேற்படி தண்டப்பணம் செலுத்துவதற்கு கம்பனி பயன்படுத்தியிருந்ததுடன் நட்டங்களுக்கு பொறுப்பான நபர்களை இனங்காண்பதற்கு முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தி எல்சீசீ கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. இவ் விடயம் சீஈபீ மற்றும் சீஎஸ்சீ இன் இரண்டு செயலாளர்களால் நியமனம் செய்யப்பட்ட விசேட குழுவொன்றின் (நெம்மவத்த குழு) புலனாய்வின் கீழ் உள்ளது. | |
| (ஆ) | நிலக்கரி குறுகிய விநியோகம் தொடர்பாக சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட் (சீஎஸ்சீஎல்) மூலம் ரௌரியன் அயன் அன்ட் ஸ்ரீல் கம்பனி லிமிட்டட்டிலிருந்து (ரீஜஎஸ்சீஎல்) பெறவேண்டிய ரூபா 539,192,079 தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை கம்பனி எடுத்திருக்கவில்லை. ரீஜஎஸ்சீஎல்/ சீஎஸ்சீஎல் இம் மீதியை உறுதிப்படுத்தியிருக்காததுடன் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டிய மீதி நிலுவையாக காணப்பட்ட போதிலும் நட்டக்கழிவிற்காக ஏற்பாடெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது அமைச்சரவைக்கு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ரௌரியன் அயன் அன்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நான்கு உறுப்பினர்களை கொண்ட குழுவொன்றை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு ஊடாக மேற்படி பரிந்துரைகளை மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியிருந்தது. | இம் மீதியை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுக் கணக்காய்வின் போது சரிபார்க்கப்பட முடியாதிருந்த ரூபா 894,151 தொகையான முன்கொண்டுவரப்பட்ட பொருளாதார சேவை கட்டணங்கள் (ஈஎஸ்சீ), ரூபா 77,719 தொகையான பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி (டபிள்யூஎச்ரீ), ரூபா 65,474,540 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி, ரூபா 3,371,326 தொகையான பெறவேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் ரூபா 12,758,801 தொகையான பெறவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) என்பன முன்னைய ஆண்டு சீராக்கமாக 2018 ஆம் ஆண்டில் நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களிற்கு | மேற்படி முன்னைய ஆண்டு சீராக்கங்கள் தொடர்பாக சீஈபீ இன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையொன்றை நாங்கள் பெற்றிருந்ததுடன் வளம்/ மூலத்தை மதிப்பீடு செய்வதற்கு மேலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. அதற்கிணங்க ஏதேனும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | காரணங்களை ஆராய்ந்தறிந்த பின்னர் இத் தவறுகளை முறையாக சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிராக அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இச் சீராக்கங்களை கம்பனி திருத்தம் செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | சீஈபீயால் செலுத்தப்பட்ட ஒளியூட்டல் வற் (lightering VAT) தொடர்பாக சிலோன் சிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட்டிற்கு (சீஎஸ்சீஎல்) செலுத்த வேண்டிய ரூபா 15,870,104 தொகை சீஎஸ்சீஎல் இற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை அல்லது சீஈபீயிடமிருந்து பெறப்பட்ட முற்பணமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனி கட்டணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு சீஈபீயிடமிருந்து நிதியை பெற்றிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட ஒளியூட்டல் வற்றை சீஎஸ்சீஎல் இற்கு செலுத்த வேண்டியதாக அவர்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஒவ்வொன்றும் 0% வற் விதிக்கத்தக்க ஒளியூட்டல் கட்டணத்தை மேற்கொள்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்வொன்றை வழங்கியிருந்தது. மேற்படி கொடுக்கல்வாங்கலை சுட்டிக்காட்டி சீஈபீ இற்கு 2020.07.17 ஆம் திகதிய செலவுத்தாளொன்றை (Credit note) நாங்கள் வழங்கியிருந்தோம். | அத்தகைய சந்தர்ப்பங்கள் சீஈபீ இற்கு ஏற்பட்ட உடனே அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | செலவினங்களை மீள்நிரப்புதல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 280,994 தொகையான வற்றானது வற் கட்டுப்பாட்டுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக வற் பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எமது சேவைகளிற்கு எந்தவொரு எல்லையும் காணப்படவில்லை. எமது வரி மதியுரையாளரால் அறிவுறுத்தப்பட்டவாறு செலவின மீள்நிரப்புதல்கள் வரி விதிக்கத்தக்கவை அல்ல ஆகும். | முறையாக திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனியானது இது தொடர்பாக குறித்த வழங்குநரிற்கு செலுத்த வேண்டியதாக அல்லது சீஎஸ்சீஎல் இற்கு செலுத்த வேண்டியதாக பேரேட்டுக் கணக்கில் பொறுப்பொன்று இல்லாமல் சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட் (சீஎஸ்சீஎல்) ஊடாக வழங்குநரிற்கு ரூபா 4,000,000 தொகையை செலுத்தியிருந்தது. எனினும் கம்பனி இத் தொகையை செலுத்த வேண்டிய சீஎஸ்சீஎல் மீதியிலிருந்து தவறுதலாக கழித்திருந்ததால் பொறுப்புக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | Mercator இற்கான சீஎஸ்சீஎல் பொறுப்பின் வளமூலம்/ தோற்றத்தை மதிப்பிடுவதற்கான புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க சீஎஸ்சீஎல் இற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்படும். | கணக்குகளில் மீதிகள் காணப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர் நிலுவை மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | Cusdec இன் பிரகாரம் உள்ளபடியான வற் தொகை ரூபா 106,969,404 ஆக காணப்பட்ட போதிலும் ஏற்றுமதி இல. 123 இற்கான சுங்க வற்றாக ரூபா 136,236,370 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. இதனால் மேலதிகமாக செலுத்தப்பட்ட வற் தொகை ரூபா 29,266,965 ஆக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றில் இது | 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு எமது காலாண்டு கணக்குகளில் ரூபா 2,759,882 வேறுபாட்டிற்கான சீராக்கத்தை நாங்கள் ஏற்கனவே செய்திருந்ததுடன் அதற்காக சீஈபீ இற்கு செலவுத்தாளொன்றை வழங்குவோம். | வேறுபாடு கணக்குகளில் சீர்செய்யப்பட வேண்டியதுடன் இலங்கை சுங்கத்திடமிருந்து இம் மீதி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 26,507,084 தொகையான பெறவேண்டிய வற்றாக காட்டப்பட்டிருந்தது. ஆகையால் கணக்காய்வின் போது இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 2,759,882 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | செலுத்த வேண்டிய சீஎஸ்சீஎல் கணக்கிற்கு ரூபா 5,218,271 தொகையை கம்பனி வரவு வைத்திருந்த போதிலும் இக் கணக்கை சரிபார்ப்பதற்கு ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியானது லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டினதும் சீஎஸ்சீஎல் பணவளிப்பு கணக்கினதும் மீதிகளிற்கிடையேயான ரூபா 31,916,562 வேறுபாட்டை கம்பனி இணக்கம் செய்திருக்கவில்லை. | மேற்படி தவறை திருத்தம் செய்வதற்கான சீராக்கல் பதிவுகளை நாங்கள் மேற்கொள்வோம்.<br><br>சரக்கு காப்புறுதி கொடுப்பனவுகள் தொடர்பான பற்றுச்சீட்டுகள் மற்றும் பெறுவனவுச்சிட்டை என்பவற்றை எல்சீசீ ஏற்கனவே சமர்ப்பித்திருந்ததால் சீஎஸ்சீ ஆல் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இது தெளிவுபடுத்தப்படும். | முறையான தொடர்பாடலுடன் தொடர்புபட்ட தரப்பினர்களிற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் தவணை தவறிய வரிக் கொடுப்பனவுகளிற்காக 2018 சனவரி 04 ஆம் திகதிய அவர்களது கடிதத்தின் மூலம் விதிக்கப்பட்டிருந்த ரூபா 500,546 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) மீதான தண்டப்பணங்கள், ரூபா 10,134,113 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் ரூபா 1,900,938 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) என்பன செலுத்த வேண்டிய தண்டப்பணங்களாக வெளிப்படுத்தப்படாமல் செலுத்த வேண்டிய வரியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | அடுத்த ஆண்டு (2020) நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை நாங்கள் செய்வோம். குறித்த தண்டப்பணங்களை விட்டுவிடுவதற்கு ஐஆர்டி உடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய தண்டப்பணமாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | 1,109,063 | உறுதிப்படுத்தல் பட்டியல்கள் | 2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பிழையான கணக்கீட்டுப் பதிவுகள் காரணமாக இம் மீதி ஏற்பட்டது. சீஈபீ உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் | கணக்குகளை முறையாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் மேற்படி தவறை திருத்தம் செய்வதற்கான சீராக்கல் பதிவுகளை நாங்கள் மேற்கொள்வோம். | |
| (ஆ) | சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய இறுதி வற் மற்றும் ஏனையவை | 180,416,885 | உறுதிப்படுத்தல் பட்டியல்கள் | இது 123 தொடக்கம் 155 வரையான ஏற்றுமதிகளின் இறுதி வற் மற்றும் பரிமாற்ற நட்டத்திற்கான பெறவேண்டிய தொகையாக உள்ளதுடன் இது இலங்கை சுங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 205 மில்லியன் கொடுப்பனவுகள் தொடர்பானதாகும். இவ்விடயம் விசேட குழு ஒன்றின் புலனாய்வின் கீழ் உள்ளது. மேற்படி அறிக்கையின் பிரகாரம் தேவையான பதிவுகளை நாங்கள் மேற்கொள்வோம். | தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்து உரிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய ஈஎஸ்சீ | 578,678,686 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | எல்சீசீ ஆனது ஈஎஸ்சீ இற்கு பொறுப்பாகியிருந்தது. சபை பத்திரங்கள், மின்னஞ்சல் மற்றும் சீஈபீ இற்கான விலைச்சிட்டைகள் ஊடாக பல சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய கம்பனியின் ஈஎஸ்சீ பொறுப்பை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் தற்போதும் அவர்கள் அதற்கான நிதிகளை விடுவித்திருக்கவில்லை. | உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டியல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சீஈபீ இற்கு செலுத்த வேண்டியவை | 6,813,692 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | இது நடுவர் மாதிரி சான்றிதழ்களின் (Umpire sample certificates) முரண்பாடு காரணமாக எம்/எஸ் ரபிகுர இடமிருந்து கோரப்பட்ட முடிவுகட்டுதல் | உறுதிப்படுத்தல்கள்/ விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நட்டத்தின் (Liquidated damage) மிகுதி தொகையாகும். அதற்காக சீஈபீ இற்கு செலவுத்தாளொன்றை நாங்கள் ஏற்கனவே வழங்கியிருந்தோம். | |
| (உ) | சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட் - பழைய செலுத்த வேண்டியவை | 28,347,444 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | இம் மீதி 2019.12.31 இல் உள்ளவாறு தெளிவுபடுத்தப்பட்டு முன்கொண்டுவந்து பணவளிப்பு கணக்கில் உள்ளடக்கப்படுகின்றதுடன் சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட்டால் உறுதிப்படுத்தப்பட்டது நாங்கள் இக் கணக்கின் வேறுபாட்டை இணக்கம் செய்திருந்ததுடன் சீஎஸ்சீ ஆல் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இது தெளிவுபடுத்தப்படும். | உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டியல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நானாவித கடன்பட்டோர் | 18,075,801 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | சுங்கங்களிற்கான மேலதிகக் கொடுப்பனவை இத் தொகை உள்ளடக்கியிருந்ததை ஆரம்ப புலனாய்வுகள் வெளிப்படுத்தியிருந்தன. மேலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. | பகுப்பாய்வு செய்த பின்னர் உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டியல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | சீஈபீயிடமிருந்து பெறவேண்டியவை | 4,677,509 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | 2017 ஆம் ஆண்டில் சீஈபீயுடன் கணக்குகளை தீர்ப்பனவு செய்த பின்னர் இத் தொகை விடப்பட்டது. வளமூலம்/ தோற்றத்தை மதிப்பிடுவதற்கு மேலும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. | தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | வியாபார கடன்பட்டோர் (சீஈபீ) நீராவி நிலக்கரி | 7,750,000 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | சீஈபீயின் சார்பில் எம்/எஸ் மோர்கேற்றரிற்கு இத் தொகை செலுத்தப்பட்டது. வளமூலத்தை/ | கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தோற்றத்தை மதிப்பிடுவதற்கு கருத்தில் கொள்ளப்படுகின்றது. இது விசேட குழுவின் புலனாய்வின் கீழ் உள்ளதுடன் அவர்களது அறிக்கைக்காக காத்திருக்கின்றோம். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | சீஈபீயிடமிருந்தான ஏனைய பெறவேண்டியவை | 1,760,500 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | 2017 ஆம் ஆண்டில் சீஈபீயுடன் கணக்குகளை தீர்ப்பனவு செய்த பின்னர் இத் தொகை விடப்பட்டது. வளமூலம்/ தோற்றத்தை மதிப்பிடுவதற்கு மேலும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. | கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | நோபிள் றிசோசஸ் இன்ரநஷனல் பிறைவேட் லிமிட்டட்டின் பெறவேண்டியவை | 1,115,987 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | ரூபா 85,887,776 தொகையான நோபிள் றிசோஸ் வியாபார கடன்கொடுத்தோரிற்கு எதிராக இக் கடன்பட்டோர் மீதியை நாங்கள் எதிரீடு செய்வோம். | கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | வியாபார கடன்கொடுத்தோர் - நோபிள் றிசோசஸ் இன்ரநஷனல் பிறைவேட் லிமிட்டட் | 85,887,776 | உறுதிப்படுத்தல், பட்டியல்கள் | எல்சீ செல்லுபடியாகும் தன்மை காலாவதியானதன் காரணமாக நோபிள் றிசோசஸ் இன்ரநஷனல் பிறைவேட் லிமிட்டட்டால் வரையப்பட்டதன் கீழான தொகையின் ஒரு பகுதியாகும். | கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் எல்சீசீ மற்றும் சீஈபீ மீதிகளிற்கிடையே ரூபா 42,063,946 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது. | சீஈபீ கணக்குகளில் ரூபா 42,063,946 தொகை உள்ளடக்காமைக்கான காரணங்கள்<br><br>**ஒளியூட்டல் சீராக்கம் - ரூபா 6,136,629**<br>இது 2018/19 காலப்பகுதிக்கான | சீஈபீயிடமிருந்து மீதிகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மொத்த ஒளியூட்டல் சீராக்கமாக காணப்பட்டது.<br><br>**தீர்வை கட்டணங்கள் - ரூபா 12,285,000**<br>இது 2018/19 காலப்பகுதியின் போது 21 ஏற்றுமதிகளிற்கான சுங்கத் தீர்வை கட்டணங்களாகும். சீஈபீ-எல்சீசீ உடன்படிக்கையின் 8(ஊ) உட்பிரிவின் பிரகாரம் நியாயப்படுத்தலை நாங்கள் ஏற்கனவே அனுப்பியிருந்ததுடன் அவர்களது உறுதிப்படுத்தலிற்காக காத்திருக்கின்றோம்.<br><br>**வற் மீதி - ரூபா 22,243,279**<br>இது 2018/19 காலப்பகுதிக்காக சீஈபீயிடமிருந்து எல்சீசீ இற்கு பெறப்பட வேண்டிய வெளியீட்டு மற்றும் உள்ளீட்டு வற்றின் வேறுபாடாகும். அக் காலப்பகுதியில் 31 ஏற்றுமதிகளில் 2020 யூன் மாதமளவில் 23 வரி சிட்டைகளை நாங்கள் ஏற்கனவே அனுப்பியிருந்ததுடன் 08 வரி சிட்டைகள் அனுப்பப்படுவதற்கு நிலுவவையாக காணப்பட்டன.<br><br>**மேலதிகமாக செலுத்தப்பட்ட வற் ஏற்பாடு – 1,399,039**<br>எல்சீசீ இற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையிலிருந்து (ஏற்றுமதி இல. 212, 214, 218, 220 மற்றும் 221) மேலதிகமாக செலுத்தப்பட்ட வற் ஏற்பாடாக சீஈபீ ரூபா 1,399,039 தொகையை கழித்திருந்தது. தொடர்புபட்ட ஏற்றுமதிகளிற்கான வரி சிட்டைகளை வழங்கிய பின்னர் இது தெளிவுபடுத்தப்படும். | |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 668,161,810 தொகையான சீஎஸ்சீஎல் செலுத்த வேண்டிய மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>ரூபா 384,410,527 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் சீஎஸ்சீஎல் மீதி உறுதிப்படுத்தலில் | **சரக்கு கட்டணங்கள் - 3,935,700**<br>Deaf நிலக்கரி சரக்கு கட்டணங்கள் (கப்பல் இல. 01) – உறுதிப்படுத்தலிற்காக காத்திருந்தது.<br><br>**ஒளியூட்டல் கட்டணங்கள்** | எல்சீசீ மற்றும் சீஎஸ்சீஎல் இற்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் உடன்படிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் |

காணப்பட்டதுடன் சீஎஸ்சீஎல் இற்கு செலுத்த வேண்டியதாக எல்சீசீ கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் இம் மீதிக்கான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் இம் மீதியை சரிபார்ப்பதற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயம்** | **தொகைகள் (ரூபா)** |
| --- | --- |
| ------------ | ------------------ |
| சரக்கு கட்டணங்கள் | 3,935,700 |
| ஒளியூட்டல் கட்டணங்கள் | 66,419,287 |
| பதுங்குகுழி சீர்செய்தல் கட்டணங்கள் | 12,190,459 |
| தாமதக் கட்டணங்கள் | 194,809,108 |
| தீர்வை செய்து முன்கொண்டு வருதல் கட்டணங்கள் பணவளிப்பு கணக்கு | 64,694,719 |
| பரிமாற்ற நட்டம்/ இலாபம் | 42,361,254 |
| **மொத்தம்** | **384,410,527** |

**ரூபா 66,419,287**

ஐஆர்டி ஆல் 0% விதிக்கப்பட்ட ஒளியூட்டல் கட்டணம் மீதான வற்.

**பதுங்குகுழி சீர்செய்தல் கட்டணங்கள் ரூபா 12,190,459**

அடிப்படை பதுங்குகுழி விலை டொலர் 11/MT இல் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் எல்சீசீ டொலர் 10.75/MT (உடன்படிக்கையின் பிரகாரம்) எடுத்திருந்தது.

**தாமதக் கட்டணங்கள் ரூபா 194,809,108**

சீஎஸ்சீ இன் புரிந்துகொள்ளலுடன் இக் கட்டணங்கள் சேகரித்தல் மீது தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. Liberty Commodities இன் நிலுவையாகவுள்ள சட்ட வழக்கு தொடர்பாக ஐ.அ.டொலர் 409,000 தொகை தற்போது நிலுவையாக உள்ளது. தீர்ப்பனவுகளை தொடர்ந்து மேற்கொண்ட பின்னர் மீதியானது ரூபா 13,470,727 மாத்திரமேயாகும். அத்துடன் தீர்ப்பனவிற்காக சீஎஸ்சீ இடமிருந்து தொடர்புபட்ட விலைச்சிட்டைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தீர்வை செய்து முன்கொண்டுவந்த கட்டண பணவளிப்பு**

ரூபா 55,462,781 – கடந்த 03 பருவாகாலங்களின் காப்புறுதிக் கிரயத்தை எல்சீசீ கழித்திருந்த போதிலும் கணக்கை சீராக்குவதற்கு காப்புறுதி பெறுவனவுகளை சீஎஸ்சீ வினவியிருந்தது. அனைத்து பெறுகைச்சீட்டுக்களும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ரூபா 4,000,000 – சீஎஸ்சீ ஏதாவது சிக்கல்கள் எழும் போது அவர்கள் இணக்கமாக தீர்க்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | கணக்குகளிலிருந்து மோர்கேற்றர் கொடுப்பனவை எல்சீசீ கழித்திருந்தது. மோர்கேற்றர் பொறுப்பின் வளமூலம்/ தோற்றத்தை மதிப்பிடுவதற்கு புலனாய்வு மேற்கொள்ளப்படுகின்றதுடன் அதற்கிணங்க உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படும்.<br><br>ரூபா 679,000 – எல்சீசீ வரவுத்தாளை வழங்கி மீன்பிடி வலைகளின் சேத கிரயத்தை கழித்திருந்த போதிலும் சீஎஸ்சீ கழித்திருக்கவில்லை.<br><br>ரூபா 4,552,938 - இத் தொகை 2020.03.31 இல் உள்ளவாறு கணக்கிணக்கம் செய்த பின்னர் விடப்பட்டதுடன் வளமூலம்/ தோற்றத்தை மதிப்பிடுவதற்கு மேலும் கருத்தில் கொள்ளப்படுகின்றது.<br><br>ரூபா 42,361,254 பரிமாற்ற நட்டம்/ இலாபம் - சீஎஸ்சீ இன் புரிந்துகொள்ளலுடன் சீஈபீயிடமிருந்து சேகரிப்பதன் மீது இவை தீர்ப்பனவு செய்யப்படுகின்றதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் சீஈபீயிடமிருந்தான பரிமாற்ற இலாபம்/ நட்டத்தை உறுதிப்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | ரூபா 15,211,259 மற்றும் ரூபா 27,913,940 தொகைகள் முறையே சரக்கு கட்டணங்கள் மற்றும் தீர்வைசெய்து, முன்கொண்டுவந்து பணவளிப்பு செய்தல் கட்டணங்களிற்காக வரவுத்தாள் மூலம் சீஎஸ்சீஎல் செலுத்த வேண்டிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் இக் கொடுக்கல் வாங்கல்களை சரிபார்ப்பதற்கு ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | சீஈபீ மற்றும் எல்சீசீ உடன்படிக்கையின் (பிற்சேர்க்கை இல. 01 – உட்பிரிவு இல. 6.1) பிரகாரம் எல்சீசீ 08 ஏற்றுமதிகளின் போது ரூபா 15,211,259 தொகையான சரக்கு கட்டணங்களை கழித்திருந்ததுடன் சீஎஸ்சீ இற்கு செலவுத்தாளொன்றை வழங்கியிருந்தது.<br><br>சுங்க வெளிப்படுத்தல் பொறுப்பிற்காக 2018/19 | உறுதிப்படுத்தப்பட்ட தெளிவான ஆவணங்கள் பேணப்பட வேண்டியதுடன் மீதி உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீஎஸ்சீஎல் அவர்களது கணக்குகளில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இம் மீதிகளை பதிவுசெய்திருக்கவில்லை. | காலப்பகுதிக்கு ரூபா 18,310,476 தொகையை மிகுதி காப்புறுதியாகவும் ரூபா 9,603,464 தொகையை தண்டப்பணமாகவும் சீஎஸ்சீஎல் கணக்கிற்கு ரூபா 27,913,940 தொகையை எல்சீசீ வரவு வைத்திருந்தது. | |
| (இ) | எல்சீசீ ஆனது சீஎஸ்சீஎல் செலுத்த வேண்டிய கணக்கிற்கு ரூபா 33,959,892 தொகையை வரவு வைத்திருந்ததுடன் ரூபா 5,218,271 தொகையை செலவு வைத்திருந்தது. எனினும் இம் மீதிகளை சரிபார்ப்பதற்கு ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 79 தொடக்கம் 154 வரையான இலக்க ஏற்றுமதிகளிற்குரிய 2015/16 மற்றும் 2016/17 காலப்பகுதிக்கான காப்புறுதிக் கிரயம் ரூபா 33,959,892 ஆகும். எல்சீசீ இக் காப்புறுதிக் கிரயத்தை சீஎஸ்சீ கணக்கிலிருந்து கழித்திருந்த போதிலும் சீஎஸ்சீ அவர்களது கணக்கை சீர்செய்வதற்கு காப்புறுதி விலைச்சிட்டைகள் மற்றும் பெறுவனவுச் சிட்டைகளை வினவியிருந்தது. அனைத்து விலைச்சிட்டைகளும் மற்றும் பெறுவனவுச் சிட்டைகளும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சீஈபீ உள்ளகக் கணக்காய்வு பிரிவால் வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிழையான கணக்கீட்டுப் பதிவுகள் காரணமாக ரூபா 5,218,271 (செலுத்த வேண்டிய சரக்கு காப்புறுதி) மீதி தொகையொன்று உருவாக்கப்பட்டிருந்தது. மேற்படி தவறை திருத்தம் செய்வதற்கு சீராக்கல் பதிவுகளை நாங்கள் மேற்கொள்வோம். | முறையான தொடர்பாடலுடன் உரிய ஆவணங்கள் தொடர்புபட்ட தரப்பினர்களிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.3 ஆம் பிரிவு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டமொன்று (எஸ்ஓஆர்பி) கம்பனியில் காணப்படவில்லை. | எஸ்ஓஆர்பி என்பது எல்சீசீ இன் கடுமையான தேவைப்பாடாகும். அத்துடன் இச் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்கு என்னால் முன்னுரிமை அளிக்கப்பட்டு எனது வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு எல்சீசீ இன் பணிப்பாளர் சபை அதன் சொந்த எஸ்ஓஆர்பி ஐ வரைவதற்கு விசேட குழுவொன்றை நியமித்திருந்தது. | எஸ்ஓஆர் இற்கான அங்கீகாரம் உடனடியாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 9.7 ஆம் பிரிவு | கம்பனியானது மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ திட்டமொன்றில்லாமல் பதவியணியினரிற்கு மருத்துவ செலவினங்களாக ரூபா 112,434 தொகையை செலுத்தியிருந்தது. | சபை அங்கீகாரம் மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த மருத்துவ செலவினங்களை நாங்கள் செலுத்தியிருந்தோம். தற்போது 2019 நவம்பரிலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ திட்டத்தை நாங்கள் கொண்டுள்ளோம். | சபை அங்கீகாரத்தை விட சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான அங்கீகாரங்களை கம்பனி பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (iii) | 9.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிட பதவிகள் 03 | எல்சீசீ இன் பணிப்பாளர் சபை அதன் சொந்த | சுற்றறிக்கையுடன் இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு தவிர காலவரையறையின்றி பதிற்கடமை அடிப்படையில் நிரப்பப்படக்கூடாது. பிரதம பெறுகை உத்தியோகத்தர் 2017 ஒக்தோபர் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கம்பனியின் பதில் பொது முகாமையாளராக நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவிநிலை 2020 திசெம்பர் 31 வரை 39 மாதங்களாக நிரப்பப்பட்டிருக்கவில்லை. | எஸ்ஓஆர்பி ஐ வரைவதற்கு விசேட குழுவொன்றை நியமித்துள்ளது. எல்சீசீ அதன் சொந்த எஸ்ஓஆர்பி இற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதும் வெற்றிடப் பதவிகள் நிரப்பப்படும். | வேண்டும். |
| (ஆ) | 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பிஈடி 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாக விளம்பரம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக ரூபா 150,000 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. | பதில் ஜீஎம் இன் பரிந்துரையின் அடிப்படையில் தலைவரால் இச் செலவினங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. அவை நிலக்கரி பெறுகையுடன் நேரடியாக தொடர்புபடுகின்றன. | 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பிஈடி/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கம்பனி பின்பற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியால் ஏற்படுத்தப்பட்ட தேறிய மேந்தலைக் கிரயத்தை மீள்நிரப்புவதற்கு இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தையோ அல்லது தேறிய நட்டத்தையோ விளைவித்திருக்கவில்லை.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

பிரதான வருமான செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதத்துடன் பின்வருமாறு உள்ளன.

| வருமானம்/ செலவினம் | 2019 (ரூபா) | 2018 (ரூபா) | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருமானம் | 42,470,160,495 | 41,470,171,433 | 999,989,062 | 2.4% |
| விற்பனைக் கிரயம் | 42,414,953,867 | 41,410,859,105 | 1,004,094,762 | 2.4% |
| நிர்வாக கிரயம் | 65,288,550 | 71,709,152 | (6,420,602) | (9%) |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிலக்கரி விலைகள் அதிகரித்தமை மற்றும் காசுக் கழிவுகள் அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 999,989,062 ஆல் அதிகரித்திருந்ததுடன் விற்பனைக் கிரயம் ரூபா 1,004,094,762 ஆல் அதிகரித்திருந்தது. மேலும் நிர்வாக கிரயம் ரூபா 6,420,602 ஆல் குறைவடைந்திருந்ததுடன் பதவியணியினர் மருத்துவ செலவினங்கள், வெளிநாட்டு பிரயாண செலவினங்கள் மற்றும் தொழில்சார் செலவினங்கள் குறைவடைந்தமை என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் ஊழியரொருவர் 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை கையாள்வதன் மூலம் ரூபா 590,193 தொகையான மோசடியொன்றை செய்துள்ளார். எனினும் இவ் அறிக்கை திகதி வரையிலும் இவ் ஊழியரிற்கு எதிராக கம்பனி ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | குறித்த ஊழியரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொகையை நாங்கள் ஏற்கனவே அறவிட்டிருந்தோம். ஒழுக்காற்று நடவடிக்கைகளாக நாங்கள் அவரது நன்னடத்தைக் காலத்தை நீடித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான பதவியணியினர் மிகையூதியத்தை செலுத்தியிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் இவ் ஊழியரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விநியோக பட்டியலிற்குரிய கேள்வி ஆவணத்தின் 2.2.5 ஆம் உட்பிரிவிற்கு எதிராக 2018/2019 காலப்பகுதிக்கான நிலக்கரி பெறுகைக்காக நிபந்தனை கேள்வியை வழங்குநரொருவர் சமர்ப்பித்திருந்ததுடன் இது கேள்வி ஆவணத்தின் 2.6.4பீ (கே) மற்றும் (எம்) உட்பிரிவின் கீழ் பிரதான வேறுபாடாகும். அப்போதைய நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (எஸ்ரீஈசீ) இக் கேள்விதாரரை பதிலளிக்காத கேள்விதாரராக மதிப்பிட்டிருந்தது. எனினும் விசேட நிலையான அமைச்சரவை நியமித்த குழு (எஸ்எஸ்சீஏபிசீ) சமர்ப்பிக்கப்பட்ட | நாட்டிற்கான நிதி நலனின் பிரகாரம் எஸ்எஸ்சீஏபிசீ எம்/எஸ் ரபிகுர இற்கு கேள்வியை வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தது. | கேள்வி ஆவணத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலக்கரியின் தரம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி நிபந்தனை கேள்வியல்ல என்பதை உறுதிப்படுத்திய பின்னர் நிதி நலனை கருத்தில் கொண்டு குறித்த வழங்குநரிற்கு இக் கேள்வியை வழங்கியிருந்தது. | | |
| (ஆ) | சுமத்ராவில் உள்ள தரஹன் துறைமுகம் - பந்தர் லம்புங்கிலிருந்து மூன்று ஏற்றுமதிகள் கப்பலில் ஏற்றப்பட்டிருந்தன, அவை கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சுமத்ராவிலிருந்தான நிலக்கரி பெறுகைக்காக அமைச்சரவை, எஸ்எஸ்சீஏபிசீ அல்லது எஸ்ரீஈசீ என்பவற்றிடமிருந்து அங்கீகாரங்களை கம்பனி பெற்றிருக்கவில்லை.. | சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷனின் ஈடுபாட்டின் காரணமாக துறைமுக கட்டுப்பாடு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில், சீஎஸ்சீ தரஹன் துறைமுகத்திலிருந்து நிலக்கரியை முனையத்தில் கொண்டுசெல்ல இணங்கியிருந்தது. மேற்படி தெரிவிலிருந்து இரண்டு நன்மைகள் காணப்பட்டன.<br>• சீஎஸ்சீ இற்கான கூடுதல் பயணங்கள் மற்றும் இது நாட்டிற்கான நிதி நன்மையாகும்.<br>• அடுத்த மிகக்குறைந்த கேள்விதாரருடன் ஒப்பிடுகையில் எம்/ரீ ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 4.10 சேமிக்கப்படுகிறது (கேள்வி விலையிலிருந்து ஐ.அ.டொலர் 3.40 மற்றும் சரக்குகளிலிருந்து ஐ.அ.டொலர் 0.70). | கேள்வி ஆவணத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இறக்குதல் துறைமுக அறிக்கைகளின் பிரகாரம் நான்கு ஏற்றுமதிகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. கம்பனி மூன்றாம் தரப்பினர் அறிக்கையை (நடுவர் மாதிரி அறிக்கை) பெற்று அதன் பிரகாரம் வழங்குநரிற்கு பணம் செலுத்தியிருந்தது. எனினும், இம் மூன்றாம் தரப்பினர் அறிக்கையை சீஈபீ ஏற்றுக்கொள்ளவில்லை, மேலும் சீஈபீ தர சீராக்கத்திற்காக ரூபா 22,520,186 தொகையைக் கழித்திருந்தது மேலும் 2019 மே 21 ஆம் திகதிய சீஈபீ இன் லக்விஜயா மின் நிலையத்தின் தொழில்நுட்பக் குழு அறிக்கையானது இந் நிலக்கரியின் தரம் மின் நிலையத்தின் கொதிகலன்களில் பயன்படுத்துவதற்கு போதுமானதாக காணப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியது. மேலும், | உடன்படிக்கையின் பிரகாரம் நிராகரிக்கப்பட்ட குறிப்பு மாதிரி எல்வீபிபி பரிந்துரைக்கப்பட்ட அவுஸ்திரேலிய ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது, உடன்படிக்கை உட்பிரிவு இலக்கம் 3.5.3 இன் பிரகாரம் அனைத்துக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கேள்விகளை அமுல்ப்படுத்திலும் மதிப்பீடுகளிலும் கேள்வி ஆவணங்களுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி அதிக ஈரப்பதம், குறைந்த சாம்பல் இணைவு வெப்பநிலை மற்றும் உயர் ஜீசீவீ சிதைவு விகிதம் போன்றவற்றைக் கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட எஸ்ஓஆர்பி இல்லாமல் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு சீஈபீ இன் சம்பள அளவீடுகளின் பிரகாரம் 2013 யூலை 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதிலும் பதவியுயர்வு வழங்குவதிலும் கம்பனியானது சீஈபீ இன் எஸ்ஓஆர்பி மூலம் வேண்டப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை பின்பற்றியிருக்காதமை எங்களால் அவதானிக்கப்பட்டது.<br><br>உதாரணம்:<br><br>கம்பனியானது சீஈபீ இன் கே4 சம்பள அளவுத்திட்டத்தை ஐந்து சம்பள ஏற்றங்களுடன் வழங்கி 2016.08.04 இல் கணக்காளர் ஒருவரை நியமனம் செய்திருந்தது. 2006.02.03 இல் அங்கீகரிக்கப்பட்ட சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இன் பிரகாரம் கணக்காளர் பதவியானது 100 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் உள்ள நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டத்தில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் 05 ஆண்டுகள் பிற்தகைமை அனுபவம் (இடைநிலை சான்றிதழ்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பீ.எஸ்சீ (கணக்கியல்) பட்டம் மற்றும் ஐ.சி.ஏ இனால் வழங்கப்பட்ட இடைநிலை பரீட்சை சான்றிதழுடன் 100 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டத்தில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் 03 ஆண்டுகள் பிற்தகைமை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். | எஸ்ஓஆர்பி என்பது எல்சீசீ இன் கடுமையான தேவைப்பாடாகும். அத்துடன் இச் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்கு என்னால் முன்னுரிமை அளிக்கப்பட்டு எனது வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு எல்சீசீ இன் பணிப்பாளர் சபை அதன் சொந்த எஸ்ஓஆர்பி ஐ வரைவதற்கு விசேட குழுவொன்றை நியமித்திருந்தது. | முறையான எஸ்ஓஆர்பி ஐ தயாரிக்கும் வரை ஆகக்குறைந்தது கம்பனியானது சீஈபீ இன் எஸ்ஓஆர்பி ஐ பின்பற்றி பதவி, பதவியுயர்வுகள் போன்றவற்றை உடனடியாக சீர்செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் அவர் பொருத்தமான பட்ட சான்றிதழ் அல்லது பொருத்தமான தகைமைகளை வழங்கும் சேவை கடிதங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும், அவர் நிரந்தர பதவியணியினரிற்கு உள்வாங்கப்பட்டு, 2017.01.08 இல் கே3 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தார், அவரது 9 மாத தகுதிகாண் காலம் முடிவடைந்து, 2018 ஜனவரி 01 இல் சீஈபீ இன் கே2 சம்பள அளவுத்திட்டத்தை வழங்கி நிதி முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டிருந்தார். சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இன் பிரகாரம் அவர் கே3 சம்பள அளவுத்திட்டத்திற்கு தகுதி பெறுவதற்கு முழு தொழில்சார் தகைமைகள் அல்லது 5 ஆண்டுகள் செயற்படு நிலையிலுள்ள சேவையையும், கே2 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவியுயர்வு பெறுவதற்கு கே3 சம்பள அளவுத்திட்டத்தில் 8 ஆண்டுகள் செயற்படு நிலையிலுள்ள சேவையையும் கொண்டிருக்க வேண்டும். | | |
| (ஆ) | நிதி முகாமையாளரால் வழங்கப்பட்ட சுயவிபரத் தரவின் பிரகாரம் அவர் சீஏ இலங்கையின் இறுதிப் பரீட்சார்த்தியாகவுள்ளதுடன் சீஏ இலங்கை ஆல் வழங்கப்பட்ட இறுதி நிலை 1 இன் பெறுபேற்றுத் தாளின் பிரதியொன்றை தனிநபர் கோவைக்கு வழங்கியிருந்தார். கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அனைத்து பிரதிகளும் ”அசல் பார்க்கப்பட்டது” என முத்திரையிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் சரியான தன்மையை கம்பனி சரிபார்த்திருக்கவில்லை. சீஏ இலங்கையிடமிருந்து நாங்கள் பெற்ற மெய்மையாய்வின் பிரகாரம் திரு பீ.ஏ.ஏ. குமாரவால் வழங்கப்பட்ட இறுதி நிலை 1 இற்கான பெறுபேற்றுத் தாள் போலியான ஒரு ஆவணமாக உள்ளதுடன் அவர் சீஏ இலங்கையின் இறுதி நிலை 1 ஐ பூர்த்தி செய்திருக்கவில்லை. சீஏ இலங்கையின் இடைநிலை தகைமையை மாத்திரமே அவர் கொண்டிருந்ததுடன் அவரது தொழில்சார் தகைமைகளுக்கான | வரைபு எஸ்ஓஆர்பி இன் பிரகாரம் நிதி முகாமையாளரிற்கான ஆகக்குறைந்த தகைமை இடைநிலை/ முகாமை மட்டத்தில் 10 வருட தகைமை மற்றும் தற்போதைய இறுதி நிலை நிறைவேற்று எம்பீஏ மாணவர் 2018/2020 என்பவற்றை கொண்டிருக்க வேண்டும். போலியான சான்றிதழிற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | வரைபு எஸ்ஓஆர்பி பிரயோகிக்கப்பட முடியாததுடன் போலியான சான்றிதழை சமர்ப்பித்த ஊழியரிற்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுகளை அவர் வழங்கியிருக்கவில்லை. எனினும் சீஈபீ இன் கே2 சம்பள அளவுத்திட்டம் வழங்கப்பட்டு நிதி முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டிருந்தார் (பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி). | | |
| (இ) | நிரந்தரப் பதவியணியினரிற்கு ஊழியர்களை உள்ளீர்ப்பதற்கு முன்னர் கல்விசார் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய எல்சீசீ உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் விளைவாக இதுவரை சரிபார்க்கப்படாத எல்சீசீ ஊழியர்களின் கல்விசார் தகைமைகளை சரிபாாப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் முறைமையானது உரியவாறு ஒழுங்கமைக்கப்படும். ஆகையால் இவை எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படமாட்டாது. | ஆட்சேர்ப்பு செயன்முறை சரியாக பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | பதவிக்கு தேவையான ஆகக்குறைந்த தகைமைகளிற்கான சான்றுகள் பரீட்சிக்கப்படாமல் ஊழியரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பமொன்று எங்களால் அவதானிக்கப்பட்டது.<br><br>உதாரணம்: மனித வளங்கள் உத்தியோகத்தர் – 2018 சனவரி 02 இல் இவ் ஊழியரை ஆட்சேர்ப்பு செய்யும் போது க.பொ.த. உ/த பரீட்சை சான்றிதழ் சரிபாாக்கப்பட்டிருக்காததுடன் அவர் அப் பரீட்சையில் சிதிதியெய்தியிருக்கவில்லை. | ஆட்சோப்பு செய்யும் சமயத்தில் எச்ஆர் உத்தியோகத்தரின் ஆகக்குறைந்த தகைமைகள் சரிபாாக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. முறையான ஆட்சேர்ப்பு செயன்முறை ஒன்றின் அறிமுகத்துடன் எச்ஆர்ஓ மனித வள முகாமைத்துவத்தில் பட்டமொன்றை தற்போது பூர்த்தி செய்துள்ளார். இவ் வகையான முறைகேடுகள் நீண்டகாலத்தில் காணப்படாது. | ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது அடிப்படை தகைமைகள் சரிபாாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எஸ்ஓஆர்பி ஒன்று காணப்படாத போது தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளை பொதுமுயற்சிகள் பின்பற்ற வேண்டும். தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை பிரமாணக் குறிப்பு/ எஸ்ஓஆர்பி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் சம்பள அளவுத்திட்டத்தின் ஒரு புள்ளியில் சம்பளத்தை வைப்பதற்கு, நியமனக் | எல்சீசீ தொடங்கப்பட்டதிலிருந்து, இது சீஈபீ, அரசாங்கம் மற்றும் கடை மற்றும் அலுவலக அதிகாரச்சட்டம் தொடர்பான பல்வேறு நடைமுறைகளை பின்பற்றியிருந்தது. எல்சீசீ அதன் தொடக்கத்திலிருந்து சரியான முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றியிருக்கவில்லை என்பதை நான் அவதானித்திருந்தேன். காலத்திற்கு காலம் பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு | சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இற்கு முரணான மேலதிகக் கொடுப்பனவுகள் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

கடிதத்தில் எந்தவொரு ஏற்பாடும் சேர்க்கப்படக்கூடாது.

எவ்வாறாயினும், எல்சீசீ சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிநிலையொன்றில் இல்லாமல் சம்பள அளவுத்திட்ட புள்ளியொன்றில் சம்பளத்தை வைக்கும் நியமனக் கடிதத்தை வழங்கியிருந்தது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியரொருவரை பதவியுயர்த்தும் போது புதிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிநிலையை விட குறைவான சம்பளத்தை அவர் பெற்றிருந்தால், அவர் புதிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிநிலையில் வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், தாபனக் விதிக் கோவைக்கு முரணாக பல ஊழியர்களுக்கான பதவி உயர்வுக்கு சம்பள ஏற்றங்களை வழங்கும் ஒரு புள்ளியில் கம்பனி சம்பளத்தை செலுத்தியது.

I. பிரதம பெறுகை உத்தியோகத்தர் அவதானிப்புக்கள்

(i) கம்பனி தவறான சம்பள ஏற்றம் காரணமாக ரூபா 1,678,919 தொகையான மேலதிக சம்பளக் கொடுப்பனவை செலுத்தியிருந்தது.

(ii) சம்பள மேலதிகக் கொடுப்பனவு தொடர்பான ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் மேலதிகக் கொடுப்பனவு ரூபா 251,838 ஆகும்.

(iii) பதவி உயர்வு மற்றும் சம்பள ஏற்றங்களிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இன் பிரகாரம் முகாமையாளர் (செயற்பாடுகள்) கே4 இலிருந்து கே3 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவியுயர்வு பெற 06 ஆண்டு சேவை அனுபவமும், கே1 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவியுயர்வு பெற 15 ஆண்டு வருகின்றன, எனவே முன்னைய அனைத்து முகாமைத்துவ நடைமுறைகளையும் சரிசெய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். எல்சீசீ எஸ்ஓஆர்பி வரைவுக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதால், குழு அறிக்கை கிடைத்தவுடன் இது சீர்செய்யப்படும்.

அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். எனினும், இந்த ஊழியர் 06 மாதங்களுக்குள் 05 சம்பள ஏற்றங்களுடன் கே4 இலிருந்து கே3 இற்கும் 09 மாதங்களுக்குள் அசாதாரண 13 சம்பள ஏற்றங்களுடன் கே3 இலிருந்து கே1 இற்கும் பதவியுயர்த்தப்பட்டிருந்தார்.

(v) கே3 இலிருந்து கே1 சம்பள அளவுத்திட்டத்திற்கு நேரடியாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

(vi) இவ் ஊழியரை ஆட்சேர்ப்பு செய்து பதவியுயர்வு வழங்கும் போது சீஈபீ இன் சம்பள அளவுத்திட்டத்திற்கு ஏற்ப அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இற்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவத்தை கம்பனி பின்பற்றியிருக்கவில்லை.

(vii) மேலும், பிரதம பெறுகை உத்தியோகத்தர் பொருத்தமான கல்வித் தகைமைகள் மற்றும் போக்குவரத்து மற்றும் Logistics முகாமைத்துவம் தொடர்பான தகைமைகள் அல்லது முதுகலை பட்டம் (பெறுகை மற்றும் தொழில்சார் தகைமைகளுடன்) என்பவற்றை கொண்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

II. பிரதம நிதி உத்தியோகத்தர் அவதானிப்புகள்

(i) கம்பனி தவறான சம்பள ஏற்றம் காரணமாக ரூபா 1,684,880 தொகையான மேலதிக சம்பள கொடுப்பனவை செலுத்தியிருந்தது.

(ii) சம்பள மேலதிகக் கொடுப்பனவு தொடர்பான ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் மேலதிகக் கொடுப்பனவு ரூபா 252,732 ஆகும்.

(iii) பதவி உயர்வு மற்றும் சம்பள ஏற்றங்களிற்காக பணிப்பாளர்

சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) கே2 இலிருந்து கே1 இற்கு பதவியுயர்வு பெறுவதற்கு எடுத்த காலம் 13 நாட்களாகும்.

(v) சீஈபீ இன் சம்பள அளவுத்திட்டத்திற்கு ஏற்ப சீஎவ்ஓ இற்கு சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் ஊழியரை ஆட்சேர்ப்பு செய்து பதவியுயர்த்தும் போது கம்பனி சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இற்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவத்தை பின்பற்றியிருக்காதமை எங்களால் அவதானிக்கப்பட்டது.

III. நிதி முகாமையாளர் அவதானிப்புக்கள்

(i) கம்பனி தவறான சம்பள ஏற்றம் காரணமாக ரூபா 170,528 தொகையான மேலதிக சம்பள கொடுப்பனவை செலுத்தியிருந்தது.

(ii) சம்பள மேலதிகக் கொடுப்பனவு தொடர்பான ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் மேலதிகக் கொடுப்பனவு ரூபா 25,579 ஆகும்.

(iii) பதவி உயர்வு மற்றும் சம்பள ஏற்றங்களிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) கே4 இலிருந்து கே3 இற்கு பதவியுயர்வு பெறுவதற்கு எடுத்த காலம் 09 மாதங்களும் கே3 இலிருந்து கே2 இற்கு 01 ஆண்டும் ஆகும்.

(v) சீஈபீ இன் சம்பள அளவுத்திட்டத்திற்கு ஏற்ப நிதி முகாமையாளரிற்கு சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் ஊழியரை ஆட்சேர்ப்பு செய்து

| | | | |
|---|---|---|---|
| | பதவியுயர்த்தும் போது கம்பனி சீஈபீ இன் எஸ்ஓஆர்பி இற்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவத்தை பின்பற்றியிருக்காதமை எங்களால் அவதானிக்கப்பட்டது. | | |
| | IV. ஏனைய ஊழியர்கள்<br><br>ஏனைய 04 ஊழியர்களுக்கு அவர்கள் சேவை காலப்பகுதியை மேவுகை செய்யும் வரை சம்பள ஏற்ற எண்ணிக்கை வழங்கப்பட்டது. ஆகையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேலதிகக் கொடுப்பனவு ரூபா 440,418 தொகையாகும். | | சம்பள ஏற்றங்கள் சேவைக் காலப்பகுதியை மேவுகை செய்யும் வரை ஊழியர்களிற்கு வழங்கப்படக்கூடாது. |
| (ஊ) | நிதி முகாமையாளர் மற்றும் பெறுகை முகாமையாளர் ஆகியோரிற்கு 2018 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கே2 சம்பள அளவுத்திட்டத்திற்கு (118,900-5x2, 145-10x2, 470) கம்பனியின் எஸ்ஓஆர்பி ஐக் குறிப்பிடுவதன் மூலம் 2018 ஜனவரி 01 இல் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் எஸ்ஓஆர்பி இன் பிரகாரம், இந்த இரண்டு ஊழியர்களும் கே3 சம்பள அளவுத்திட்டத்தில் (97,920-5x1,755-10x1,820) வைக்கப்பட வேண்டும். இருப்பினும், இந்த பதவி உயர்வுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் இதுவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தின் பிரகாரம் (எஸ்ஓஆர்பி) முகாமையாளர் (பெறுகை) கே3 சம்பள அளவுத்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். ஊழியருக்கு முழு தொழில்சார் தகைமை இருந்தால், அவர்/ அவள் கே2 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவி உயர்வு பெற 06 ஆண்டு சேவை காலத்தை பூர்த்தி செய்ய வேண்டும், மேலும் ஊழியருக்கு பகுதியளவில் தொழில்சார் தகைமை இருந்தால், அவர்/ அவள் 08 ஆண்டு சேவை காலத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.<br><br>பின்னர், முறையான அங்கீகாரம் | இந்த பதவி உயர்வுகள் மற்றும் ஊதிய உயர்வுகள் பல சபைக் கூட்டங்களின் போது அவற்றின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட எஸ்ஓஆர்பிக்களை அடிப்படையாக கொண்டிருந்தன. புதிய எஸ்ஓஆர்பி எல்சீசீ சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இந்த சிக்கல்கள் சரிசெய்யப்படும். | கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து அங்கீகரிக்கப்படாத எஸ்ஓஆர்பி இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமல், இந்த இரண்டு ஊழியர்களுக்குமான சம்பளம், ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் மேலதிகக் கொடுப்பனவு ரூபா 1,447,620 தொகையாகும். | | |
| (எ) | கம்பனியானது பணிப்பாளர் சபை மற்றும் சம்பளங்கள் மற்றும் ஆளணி குழுவிடமிருந்தான அங்கீகாரமின்றி 2018 சனவரி 01 தொடக்கம் பதவியணிக்கான 25% சம்பள அதிகரிப்பை செலுத்தியிருந்தது. | 12 ஆண்டுகளிற்கு மேலாக முறையான நடைமுறையை பின்பற்றாததால் இச் சிக்கல் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றது. அதனால்தான் இச் சிக்கல்களை கண்டறிந்த பின்னர் அவற்றை கடக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கொடுப்பனவுகளிற்கு முன்னர் அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட எஸ்ஓஆர்பி ஐக் கொண்டிருக்கவில்லை என்றால் பொதுமுயற்சிகள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு பதவியில் பதிற்கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரிற்கு அவரது/ அவளது நிரந்தர பதவியின் கடமைகளை நிறைவேற்றும் போது, பதில்கடமை பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 25% மற்றும் உத்தியோகத்தரின் நிரந்தர பதவியின் சம்பளம் என்பன செலுத்தப்பட முடியும். இருப்பினும், பிரதம பெறுகை உத்தியோகத்தரிற்கு குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக பொது முகாமையாளரின் பதில்கடமை பதவியின் சம்பளத்தில் 50% க்கு சமமான பதில்கடமை படி செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இது அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.6 ஆம் பிரிவை பின்பற்றுவதன் மூலம் சீர்செய்யப்படும். | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | முறையான அங்கீகாரமின்றி 2018 யூன் 01 தொடக்கம் பிரத்தியேக செயலாளரிற்கு மாதமொன்றிற்கு ரூபா 2,500 படிகளை கம்பனி செலுத்தி வருகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முன்னர் பின்பற்றப்பட்ட முறைமையின் பிரகாரம் எல்சீசீ இன் முன்னாள் தலைவரால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் படிகளின் கொடுப்பனவிற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | 2017 திசெம்பர் 31 வரை சீஈபீ ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையை கம்பனி பயன்படுத்தியிருந்த போதிலும் கம்பனியானது 03 ஆண்டுகளிற்கு குறைவான வெவ்வேறு தகுதிகாண் காலங்களுடன் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தது. | இதில் நீங்கள் குறிப்பிடப்பட்ட 3 ஊழியர்களும் தலைவர் எல்சீசீ ஆல் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | முகாமையாளர் (பெறுகை) 2017 செப்தெம்பர் 15 இல் கே3 சம்பள அளவுத்திட்டத்திற்கு (97,920-5x1,755-10x1,820) 01 ஆண்டு தகுதிகாண் காலத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். அவருக்கு 2018 மார்ச் 16 இல் நிரந்தர கடிதம் வழங்கப்பட்டது. பின்னர் நியமனக் கடிதத்தின் பிரகாரம் தகுதிகாண் காலம் ஒரு வருடம் எனவும் அவர் சபை அங்கீகாரம் இல்லாமலும் பதவி உயர்வு நடைமுறையை மீறியும் 06 மாதத்திற்குப் பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, கே3 சம்பளத்திலிருந்து கே2 சம்பள அளவுத்திட்டத்திற்கு பதவியுயர்த்தப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேலுள்ளவாறான அதே விடயம். | சரியான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பிரயோகிக்கப்பட வேண்டும். |
| (ஒள) | 2010 செப்தெம்பர் 14 இல் நியமனம் இல் நியமனம் செய்யப்பட்ட கணக்கு உதவியாளர் தகுதிகாண் காலம் முடிவடைந்திருக்காததுடன் நிரந்தர பதவியணிக்கு உள்ளீர்க்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இவ் விடயம் கருத்தில் கொள்ளப்படுகின்றதுடன் அது சீர்செய்யப்படுகின்றது. | சரியான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பிரயோகிக்கப்பட வேண்டும். |
| (க) | தகுதிகாண் காலத்தின் பின்னர் நிரந்தரப் பதவியணிக்கு ஆட்சோப்பு செய்யப்படும் போது அல்லது உள்ளீர்க்கப்படும் போது மூலச் சான்றிதழ்களின் சரியான தன்மை கம்பனியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பின் போது சான்றிதழ்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (கா) | 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரின் பதவியணியினர், அமைச்சுக்களிற்கான செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் உள்ளடங்கலான அனைத்து அரச உத்தியோகத்தர்களும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் ஊடாக அவர்களது வேலை இடங்களில் உள்வருதல் மற்றும் | 2020 ஆகஸ்ட் 21 இலிருந்து உரிய முகாமையாளர்களிற்கு கைவிரல் அடையாள இயந்திரங்களை பின்பற்றுவதற்கு தேவையான படிமுறைகளை எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிச்செல்லுதலை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் கம்பனியின் முகாமையாளர்கள் இச் சுற்றறிக்கையுடன் இணங்கியிருக்கவில்லை. | | |
| (கி) | 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் இடர் கடன் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கம்பனி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியின் முகாமையாளர்கள் இச் சுற்றறிக்கையுடன் இணங்கியிருக்கவில்லை. | 2020 யூன் 10 இல் நடைபெற்ற 73 ஆவது சபைக் கூட்டத்தில் எல்சீசீ இன் சபை ஊழியரொருவரிற்கு மீதி குறைந்து செல்லும் அடிப்படையில் 6% வட்டி விகிதத்தில் ஆகக் கூடியது ரூபா 350,000 கடன் வசதியை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தது. | சுற்றறிக்கை மூலம் வேண்டப்பட்டவாறு பொதுத் திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை மூலம் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக கம்பனியால் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் பாதிடப்பட்ட வருமான செலவினக் கூற்று, ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ஐந்தொகை மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சேர்ந்த பாதிடப்பட்ட மூலதன செலவினக் கூற்று என்பவற்றை வருடாந்த பாதீடு உள்ளடக்க வேண்டிய போதிலும் கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |